KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Vorsteher

**Alex Hürzeler**
Regierungsrat
Bachstrasse 15, 5001 Aarau
Telefon zentral 062 835 20 00
Fax 062 835 20 06
alex.huerzeler@ag.ch
www.ag.ch/bks

ஆர்காவ் தொடக்கப் பள்ளி
மாணவர்களின்
பெற்றோர்களுக்கு

26 ஏப்ரல் 2021

**பள்ளிகளில் தொடர்ச்சியான கோவிட் 19 பரிசோதனைகள்**

அன்புள்ள பெற்றோர்களே

தொடர்ச்சியாக பரிசோதனை செய்வது பெருந்தொற்றை எதிர்த்துப் போராடுவதில் முக்கியம் என்று ஆர்காவ் கண்டன் அரசாங்கம் முழுமையாக நம்புகிறது. எனவே பள்ளிகளிலும் இது போன்ற விரிவான பரிசோதனையை மேற்கொள்வது என்று ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் முடிவெடுக்கப்பட்டது.

**இப்பொழுது உங்கள் குழந்தையின் பள்ளி வாராந்திர அடிப்படையில் தொடர்ச்சியான பரிசோதனைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். உங்கள் குழந்தை பரிசோதனைகள் செய்துகொள்வது தன்னார்வத்திலானது மற்றும் கட்டணமில்லாதது.**

கூறப்படும் இந்த பரிசோதனைகள் உமிழ்நீர் மாதிரிகளை உள்ளடக்கியது. அவை காலையில் இல்லத்தில் எடுக்கப்படும். உமிழ்நீர் மாதிரி எடுப்பதால் அசௌகரியமோ, வலியோ ஏற்படாது. அதன் பிறகு உங்கள் குழந்தை அந்த மாதிரியை பள்ளிக்கு எடுத்துச் செல்லும். அந்த மாதிரி சேகரிக்கப்பட்ட பிற மாதிரிகளுடன் (சேர்த்து) இருப்பு வைக்கப்பட்டு, ஆய்வகத்தில் அநாமதேயமாகப் பரிசோதனை செய்யப்படும்.

பரிசோதனை முடிவு குறித்து உங்களுக்கு, உங்கள் குழந்தைக்கு நேரடியாகத் தெரிவிக்கப்படும். ஒரு சேர்க்கையிலிருந்து பெறப்பட்ட ஒரு மாதிரி நேர்மறை முடிவைக் காட்டுமானால், அந்தச் சேர்க்கையிலுள்ள அனைவருக்கும் பள்ளியில் இரண்டாம் முறையாகப் பரிசோதனை செய்யப்படும். நேர்மறை முடிவைக் கொண்டிருப்பவர் உடனடியாகத் தனிமைப்படுத்தப்படுவார்கள் மற்றும் காண்டாக்ட் ட்ரேசிங் கான்டான் ஆர்காவ் (CONTI) மூலம் மேற்பார்வை செய்யப்படுவார்கள்.

தன்னார்வ பரிசோதனைகளுக்கு நீங்கள் ஒவ்வொருவருக்கும் ஒருமுறை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்வதற்கான இணைப்பை நீங்கள் நேரடியாக உங்கள் குழந்தையின் பள்ளியிலிருந்து பெறுவீர்கள். இந்த பதிவின் மூலம் தொடர்ச்சியான பரிசோதனைகளுக்கும் அவற்றுக்குத் தேவையான தரவுச் செயலாக்கத்துக்கும் வெளிப்படையாக **உங்களுடைய தனிப்பட்ட ஒப்புதலைத் தருகிறீர்கள்**.

தொடர்ச்சியான பரிசோதனைகள் குறித்து உங்களுக்கு இருக்கக் கூடிய ஏதாவது கேள்விகளுக்கு உங்கள் பள்ளி மகிழ்ச்சியுடன் பதிலளிக்கும். மேலும் தகவல்களுக்கு, நீங்கள் கீழ்வரும் இணைய முகவரிக்கு வருகை தரலாம் www.ag.ch/coronavirus-rete.

இந்த நடவடிக்கைகள் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த உதவி, பள்ளியின் உறுப்பினர்களுக்கு, அவர்களின் குடும்பத்தினருக்கு போதிய பாதுகாப்பைத் தரும் என நாங்கள் முழுமையாக நம்புகிறோம்

உங்களுடைய நம்பிக்கைக்கு, ஆதரவுக்கும் நன்றி இப்பொழுதும் நமது நடவடிக்கைகளைத் தொடர்வோம்

வணக்கத்துடன்



Alex Hürzeler
Regierungsrat



Dr. med. Yvonne Hummel
Kantonsärztin